# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2160/52 - 2020 ජනවාරි මස 31 වැනි සිකුරාදා - 2020.01.31
**2160/52 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2020 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல.: 3J/74/L/708.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : 3/61/182.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உரிமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ். எம். சந்திரசேன,
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,
'மிஹிகத மெதுர' இல. 1200/6, காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020 சனவரி 15.

**அட்டவணை**

I. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், பன்னல.

II. **காணியின் விபரம்** : வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பன்னல பிரதேச செயலாளர் பிரிவில், மெதபற்று கிழக்கு கோறளே சிறு பிரிவில், இல. 448, போபிட்டிய கிராம அலுவலர் பிரிவில், நெகதி லப்பல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இ.கி.வ. 364, தாள் இல 2, பிற்சேர்க்கை இல 2 மற்றும் 1989.09.07 ஆந் திகதிய இறுதிக் கிராம வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட கீழே குறிப்பிடப்பட்ட பெயர், விஸ்தீரணத்தினைக் கொண்ட காணித்துண்டு :

**01. துண்டு இல. 69 - பெலவத்தை - விஸ்தீரணம்: 0.2124 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 15 மற்றும் 18 ; கிழக்கு : துண்டு இல. 18 மற்றும் 15 ; தெற்கு : துண்டு இல. 15 ; மேற்கு : துண்டு இல. 16 மற்றும் 15.

02-288

1A - G31913 - 21 (2020/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.